# 18.05.2026 செய்திகள்

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 38 ஆக உயர்வு: குடியரசுத் தலைவர் முர்மு ஒப்புதல்

- உச்சநீதிமன்றத்தில் தற்போது தலைமை நீதிபதி மற்றும் 33 நீதிபதிகள் என்ற அளவில் நீதிபதிகளின் எண்ணிக்கை உள்ளது.
- இந்த எண்ணிக்கையை 38-ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை கடந்த 5-ஆம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது.
- அடுத்தகட்டமாக 4 நீதிபதி பணியிடங்களை அதிகரிக்கும் திருத்த மசோதா வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்று கூறியுள்ளார்.
- உச்சநீதிமன்ற சட்டம் (நீதிபதிகள் எண்ணிக்கை) 1956-இல் இயற்றப்பட்டபோது, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தவிர்த்து பிற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 10 என்ற அளவில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டது.
- 1960-இல் திருத்தச் சட்டம் மூலம் எண்ணிக்கை 13-ஆகவும், அடுத்த சட்டத் திருத்தம் மூலம் நீதிபதிகள் எண்ணிக்கை 17-ஆகவும் உயர்த்தப்பட்டது.
- பின்னர், 1986-இல் மீண்டும் திருத்தச் சட்டத்தின் மூலம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 17-லிருந்து 25-ஆக உயர்த்தப்பட்டது.
- பின்னர், 2009-இல் இந்த எண்ணிக்கை 30-ஆகவும், 2019-இல் தலைமை நீதிபதி உள்பட பிற நீதிபதிகளின் எண் ணிக்கை 34-ஆகவும் உயர்த்தப்பட்டது.

SURESH

## கிளாண்டர்ஸ் தொற்று

» கிளாண்டர்ஸ் என்றால்:

- குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகளைத் தாக்கும் ஒரு வகையான தொற்று.
- பர்கோல்டெரியா மலேய் எனும் பாக்டீரியா நுண்ணுயிரியால் பரவுகிறது.
- குதிரை மற்றும் கழுதைகளுக்கு இடையே மிக வேகமாக பரவக் கூடியது.
- அந்த பாதிப்புக்குள்ளான விலங்குகளின் உடல் முழுவதும் கழலைக் கட்டிகள் (கிளாண்ட்) உருவாகும் என்பதால் இதற்கு கிளாண்டர்ஸ் நோய் என்று பெயர்.

» எப்படி பரவுகிறது?

- தொற்றுக்குள்ளான குதிரைகளின் தோல் பகுதியில் கொப்பளங்கள் மற்றும் கழலைக் கட்டிகள் தோன்றி புண்ணாக மாறும். அதிலிருந்து வெளியேறும் திரவம் வாயிலாக பிற விலங்குகளுக்கும் தொற்று கடத்தப்படுகிறது.
- குதிரையின் சுவாசப் பாதை, மூக்கு, மூச்சுக் குழாய், நுரையீரலிலும் புண்கள் உருவாகி நீர்த் திவலைகள் வெளியேறும்.
- இந்நோய்க்குள்ளான விலங்குகளில் 95 சதவீதம் உயிரிழக்கின்றன. தமிழகம் மற்றும் உத்தர பிரதேசத்தில் அடிக்கடி இந்த பாதிப்பு பதிவாகிறது.

» மனிதர்களுக்கு பரவுமா?

- தொற்றுக்குள்ளான விலங்குகளிடம் நேரடித் தொடர்பில் இருப்பவர்களுக்கு கிளாண்டர்ஸ் நோய் பரவும் வாய்ப்புள்ளது.
- குறிப்பாக, கால்நடை மருத்துவர்கள், விலங்குகளைப் பராமரிப்பவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் அதிகம்.

» பரவும் விதம்:

- விலங்கின் புண்களில் இருந்து வெளியேறும் திரவம் மனிதர்களின் தோலில் நேரடியாக படுவதால் தொற்று பரவும். தொற்றுக்குள்ளான குதிரை, கழுதைகளின் கண்ணீர், சளி, உமிழ் நீரிலிருந்தும் பரவும்.
- அவை இருமும் போதும், கனைக்கும் போதும் அதில் இருந்து வெளியேறும் நீர்த் திவலைகளை சுவாசிப்பதால் மனிதர்களுக்கு தொற்று கடத்தப்படுகிறது.

## எண்ணெய் நெருக்கடியும்.. தங்க மோகமும்..

- ஈரானைச் சுற்றியுள்ள போரும் அதனால் உருவான புவிசார் அரசியல் பதற்றங்களும், கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகமாகச் சார்ந்துள்ள நாடுகளுக்கு கடினமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.
- நாம் ஒட்டுமொத்த கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 85-89 சதவீதத்தை இறக்குமதி செய்கிறோம். போர் சூழ்நிலையினால் கச்சா எண்ணையின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.
- இதுவரை, கச்சா எண்ணெய் இறக்குமதி செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் பெரும்பகுதி நுகர்வோருக்கு முழுமையாக மாற்றப்படாமல், எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (OMCs) ஏற்றுக் கொண்டுள்ளன.

» அதிக தங்க நுகர்வு ஏற்படுத்தும் சிக்கல்

- இந்தியாவுக்கு இன்னொரு கட் டமைப்பு சார்ந்த சவாலும் உள்ளது அதாவது தங்க நுகர்வு. நாட்டின் உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்ய பெருமளவில் தங்கத்தை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.
- இது ஒரு பக்கம் டாலர் செலவையும் மறுபக்கம் ரூபாய்-டாலர் மாற்று விகிதத்தின் மீது கூடுதல் அழுத்தத்தையும் ஏற்படுத்துகிறது.
- உலக அளவில் தங்கம் கையிருப்பு வைத்திருப்பதில் இந்திய குடும்பங்கள் முன்னிலையில் இருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சுமார் 25,000 முதல் 34,000 டன் தங்கம் இந்தியர்களிடம் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.
- நகைகள், நாணயங்கள், தங்கக் கட்டிகள் மற்றும் கோயில் களஞ்சியங்கள் போன்ற வடிவங்களில் இருக்கும் இந்தத் தங்கத்தின் மதிப்பு பல லட்சம் கோடி டாலர்களாக இருக்கலாம்.
- இது இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ தங்க கையிருப்பைவிட (சுமார் 900 டன்) பல மடங்கு அதிகம்.
- இந்தியாவில் திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் மத பாரம்பரியங்களில் தங்கம் கலாச்சார முக்கியத்துவம் பெறுவதோடு, பணவீக்கம் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு எதிரான பாதுகாப்பான நீண்டகால முதலீடாகவும், குறிப்பாக கிராமப்புறங்களில் நம்பகமான நிதி சேமிப்பு வடிவமாகவும் கருதப்படுகிறது.

» 2-ம் இடத்தில் தங்கம் இறக்குமதி

- 2025-26 நிதியாண்டில், இந்தியாவின் தங்க இறக்குமதி சுமார் 72 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- நாட்டின் மொத்த இறக்குமதி செலவில் தங்கத்தின் பங்கு சுமார் 9% ஆக இருந்தது. இது கச்சா எண்ணெய்க்கு அடுத்தபடியாக 2-வது மிகப்பெரிய இறக்குமதி பொருளாகும்.

» இந்த நடவடிக்கைகளின் நோக்கம்:

- பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாப்பது
- வெளிநாட்டு நாணய கையிருப்பை காப்பது
- அத்தியாவசியமற்ற இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது

SURESH'

» <u>மேலும் சில யோசனைகள்:</u>

- தங்க ஈடிஎப்-களின் (Gold Exchange Traded Fund) விரிவாக்கத்தை கட்டுப்படுத்துதல்: 2026 ஆரம்ப கால தரவுகளின் படி, பொருளாதார நிச்சயமற்ற காலங்களிலும் விலை மாற்றங்களின்போதும், தங்க ஈடிஎப் திட்டங்கள், தங்கத்தின் தேவையை அதிகரிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக மாறியுள்ளன.
- 2026 முதல் காலாண்டில் மட்டும் இந்திய தங்க ஈடிஎப்-கள் சுமார் 20 டன் தங்கத்தை வாங்கியதாகக் கூறப்படுகிறது: ஜனவரி (2026) மாதத்தில் மட்டும் ஈடிஎப் முதலீடு, மாதாந்திர தங்க இறக்குமதியின் முக்கிய பங்காக இருந்தன.
- வெளிநாட்டு நாணயக் கையிருப்பின் மீது அழுத்தம் அதிகரிக்கும் சூழலில், ஈடிஎப்-களின் விரிவாக்கத்துக்காக புதிய தங்கத்தை பயன்படுத்துவதை தற்காலிகமாக கட்டுப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.
- ஆனால், தங்க ஈடிஎப்-கள் முதலீட்டாளர்களுக்கு வெளிப்படையான மற்றும் கட்டுப்பாடுள்ள முதலீட்டு வாய்ப்பாக இருப்பதும் உண்மை. இது சில சமயங்களில் நகைகள் மற்றும் தங்க நாணயங்களுக்கான தங்க தேவையை குறைக்க உதவலாம். எனவே, எந்தக் கட்டுப்பாடுகளும் கவனமாக வடிவமைக்கப்பட வேண்டும்.

» <u>இந்நிலையில், ரிசர்வ் வங்கி பின்வரும் அம்சங்களில் கட்டுப்பாடுகளை கடுமையாக்கலாம்:</u>

- லோன் டு வேல்யூ விகிதங்களின் மறுபரிசீலனை
- கடனின் பயன்பாட்டை கண்காணித்தல்
- வட்டியை அதிகரித்தல்
- ரிஸ்க் வைட்டை அதிகரித்து வங்கிகள் வைக்கும் உபரி நிதியை அதிகரித்தல்

- இத்தகைய நடவடிக்கைகள் தங்கத்தின் மீது அதிகப்படியான கடன் சார்பை தடுக்க உதவலாம். இது சந்தையில் வர்த்தகத்துக்கான தங்கத்தை அதிகரிக்கும்.

## 300 ஆண்டுகளுக்குப் பிறகு நெதர்லாந்தில் இருந்து தாயகம் திரும்பிய ஆனைமங்கலம் செப்பேடுகள்

SURESH'

- மாமன்னன் ராஜராஜ சோழனின் 21-வது ஆட்சியாண்டில், கி.பி.1005-ல் நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிஜய கிடாரத்து அரசன் மாறவிஜயோத்துங்க வர்மனால் கட்டப்பட்ட 'சூளாமணி வர்ம விகாரம்' என்ற புத்த விகாரத்துக்கு 97 வேலி பரப்பு கொண்ட ஆனைமங்கலம் கிராமத்தை ராஜராஜ சோழன் பள்ளிச்சந்தமாக வாய்மொழியாக தானம் வழங்கினார்.
- ராஜராஜன் 1014-ல் உயிரிழக்கும் வரை இச்சாசனம் உருவாகவில்லை. அவரது மகன் முதலாம் ராஜேந்திர சோழன் இதை எழுத்துப்பூர்வமாக பட்டயம் வெட்டி உறுதி செய்தார். 30 கிலோ எடை கொண்ட 21 செப்பேடுகள், ஒரு வெண்கல வளையத்தால் பிணைக்கப்பட்டுள்ளன. வளையத்தில் சோழ அரச முத்திரை உள்ளது. 5 ஏடுகள் வடமொழியிலும், 16 ஏடுகள் தமிழிலும் உள்ளன.
- குலோத்துங்க சோழன் உறுதி செய்த 3 சிறிய ஏடுகளும் இணைக்கப்பட்டுள்ளன. சைவ சமயத்தை சார்ந்த ராஜராஜ சோழன், ஒரு புத்த விகாரத்துக்கு ஊரையே தானம் செய்தது தமிழ் மன்னர்களின் சமய பொறையை காட்டுகிறது. தமிழ் ஏடுகள் அன்றைய நிர்வாக சொல்லாடல், நில அளவை முறை, சட்டப்பூர்வ ஆவண மரபை பதிவு செய்கின்றன.
- 11-ம் நூற்றாண்டின் சர்வதேச வர்த்தகம், பவுத்த - சைவ நல்லிணக்கம், சோழர்களின் நிர்வாகத் திறன், கடல்கடந்த ராஜதந்திர உறவுக்கு இது சான்றாக விளங்குகிறது. சோழர் அரசர் பட்டியல், அதிகாரிகள் பட்டியல், வென்ற நாடுகள் குறிப்பும் உள்ளது.
- 18-ம் நூற்றாண்டு டச்சு ஆதிக்கத்தின்போது ஃப்ளோரன்சியஸ் கேம்பர் என்பவரால் நாகையிலிருந்து இந்த செப்பேடுகள் நெதர்லாந்து எடுத்துச் செல்லப்பட்டன. ஹமேக்கர் குடும்பத்தினர் வசம் இருந்து, 1862-ல் லெய்டன் பல்கலைக் கழக அருங்காட்சியத்துக்கு நன் கொடையாக வழங்கப்பட்டன.
- இவற்றை மீட்டு தமிழகத்துக்கு கொண்டுவர வேண்டும் என்று ஏராளமான தமிழ் ஆர்வலர்கள் தொடர்ந்து குரல் கொடுத்தனர்.
- ஆனைமங்கலம் செப்பேடுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழனின் கொடைத்திறன், மதநல்லிணக்கம், நிர்வாக நேர்மை, சர்வதேச பார்வை ஆகியவற்றை பேசும் காலக்கண்ணாடியாக உள்ளது.